**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**O.S.No.1408/2022**

**வழக்கு சாட்சி PW.1**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஈஸ்வரி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : குப்பணகவுண்டர் | கணவர் பெயர் | : பழனிவேல் |
| கிராமம் | : கொல்லப்பட்டி | வயது | : சுமார் 63 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 07.11.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான குறுக்கு விசாரணை**

எனது தகப்பனார் 07.09.2000ம் தேதியில் அவரது வாரிசுகளுக்கு எழுதப்பட்ட உயிலினை 05.06.2008ம் தேதி ரத்து செய்துவிட்டார் என்றால் ? சரிதான். எதற்காக உயில் சாசனத்தை ரத்து செய்தார்கள் என்று தெரிந்து கொண்டேனா என்றால் ? அவருடைய சொத்தை பொறுத்து அவர் உயில் சாசனத்தை ரத்து செய்துவிட்டார். உயில் ரத்து ஆவணத்தில் எனது பெண் பிள்ளைகள் தன்னை பார்க்கவில்லை என்பதாலும், இந்த உயில் ரத்து ஆவணத்திற்கு பிறகு வேறு ஆவணங்கள் ஏற்பாடு செய்து வைக்கப்போகிறேன் என்று சொல்லிதான் அந்த ரத்து ஆவணம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் ? சரியல்ல. வா.சா.ஆ.3 உயில் ரத்து ஆவணமானது நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணம் என்றால் ? இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும், முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஆவணத்தை கொடுத்துவிட்டு தற்போது நான் எந்தவித ஆவணத்தையும் கொடுக்கவில்லை என்று வழக்கிற்காக வேண்டி சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–3 ஆவணத்தில் மேற்படி என்னுடைய பெண் மக்கள் என்னை கவனிக்காததாலும்

மேற்படி உயில் சாசனத்தில் கண்டுள்ள சொத்துக்களை மாற்றி வேறு ஏற்பாடு செய்ய இருப்பதாலும், மேற்படி உயில் சாசனத்தை இதன்மூலம் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்று கண்டுள்ளது என்றால் ? சரியல்ல. உயில் சாசனத்தில் கண்டுள்ள சொத்துக்களும், தாவா சொத்துக்களும் பொதுவாக தான் வைத்து அனுபவித்து வரப்படுகிறது என்றால் ? சரியல்ல. எனது அப்பா குப்பணகவுண்டர் தாவா சொத்தை பொறுத்து எந்தவித ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்துவிட்டார் என்றால் ? சரிதான். எனது தந்தை குப்பணகவுண்டரின் வாரிசுகள் தான் தாவா சொத்துக்களை பொதுவாக வைத்து அனுபவித்து வருவதால் பிரிக்கப்படாத சொத்துக்கள் இருப்பதால் நான் மட்டும் தனித்து அனுபவித்து வருவதாக விளம்புகை பரிகாரம் கோர இயலாது என்றால் ? சரியல்ல. எனது தகப்பனார் இறந்துவிட்டபிறகு எனது தாயாரால் சொத்துக்களை பராமரிக்க இயலவில்லை. எனவே உயில் சாசனத்தில் தகப்பனார் ஏற்கனவே எவ்வாறு எழுதி வைத்தாரோ அதன் அடிப்படையிலேயே அனுபவிக்க சொல்லி எனது தாயாரும், சகோதரிகளும், சகோதரிகளின் கணவரும் சொல்லிவிட்டார்கள். எனது சகோதரிகள் பெயர்கள் என்ன என்றால் ? கருப்பாத்தாள், செல்லாத்தாள், வளர்மதி, எனது இறந்துபோன சகோதரி பழனியம்மாளின் கணவர் மணி ஆகியோர்கள் சொன்னார்கள். நான் மேற்சொன்ன நபர்கள் தான் இவ்வழக்கில் எனக்கு எதிராக எதிர்வாதம் செய்து வருகிறார்கள் என்றால் ? வழக்கு தாக்கல் செய்த பிறகு எதிர்வாதம் செய்து வருகிறார்கள். வழக்கிற்கு பிறகு எனது சகோதரிகள் எதிர்வாதம் செய்து வருவதாக நான் சொல்லியுள்ள நிலையில் எதற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? நான் வீடு கட்டி தென்னை மரம் வைத்து, 5 H.P. மோட்டார் வைத்து எனக்கு வாய்மொழியாக நாங்கள் பிரித்து கொண்ட சொத்தினை அனுபவித்து வருகிறேன். நான் அனுபவித்து வரும் இடத்திற்கு மண்களை மாற்றியுள்ளேன். பிரிக்கப்படாத சொத்தில் பிரதிவாதிகள் பாகம் கேட்டதால் பாகம் கொடுக்க மனம் இல்லாமல் நான் இந்த வழக்கை தாக்கல்

செய்துள்ளேன் என்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கும் தவறு, வழக்கிற்கான வாக்குமூலம் தவறு என்றாலும், செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு என்றாலும் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.07 16:42:00 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்